பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர் : 15] சென்னை : ஆடி 6உ (22—7—67) சனி ★ வெளியூர் : ஆடி 7உ (23—7—67) ஞாயிறு [இதழ் : 33

ஊதியத்தை உயர்த்திக்கொள்ளும்

காங்கிரசு அமைச்சர்கள்!

மைசூர் மாநில அரசு தனது அமைச்சர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காகச் சட்டத்தைத் திருத்த எண்ணியுள்ளதாகத் தெரிகிறது.

இதன்படி அமைச்சர்களின் மாதச் சம்பளம் ரூ. 900-லிருந்து ரூ. 1,200 ஆக உயரும்.

இத்துடன், வீட்டு வாடகைப்படி ரூ. 250-லிருந்து ரூ. 350 ஆகவும், பயணச் செலவுப் படி ரூ. 200-லிருந்து ரூ. 350 ஆகவும் உயரும்.

இதுவரை ரூ. 1,350 பெற்றுவந்த அமைச்சர்கள் இனிமேல் ரூ. 1,900 சம்பளம் பெறுவார்கள்.

—'டெக்கான் ஹெரால்டு'

'சிவ சேனை'யின் வெறி நோக்கு!

பம்பாய்வாழ் தமிழர்கள்மீது பாய்ச்சல்

தென்னிந்தியர்களுக்கு எதிராகச் சட்டமன்றத்தின்முன் ஆர்ப்பாட்டம்

பம்பாய், ஜூலை 21—

தென்னிந்தியர்கட்கு எதிராக 'சிவசேனை' என்ற பெயரில் இயங்கிவரும் வகுப்புவாத வெறியர்கள், இன்று இங்கு பெரும் ஊர்வலம் ஒன்றினை நடத்தி சட்டமன்றத்தின்முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"பம்பாய்வாழ் தமிழர்களையும், மலையாளிகளையும் மகாராட்டிரத்திலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்" என்று வற்புறுத்தும்வகையில், சிவசேனையின் முழக்கங்களும் அமைந்திருக்கின்றன.

'சிவசேனை வாழ்க' என்ற முழக்கத்துடன் சுமார் 10,000 பேர்கள் அடங்கிய ஊர்வலம் இன்று பிற்பகல் சட்டமன்றக் கட்டிடத்தை நோக்கி வந்தது.

லாரி ஒன்றில் சிவாஜியின் உருவச் சிலை வைக்கப்பட்டு, அதில், அதன் தலைவர்களும் அமர்ந்து ஊர்வலத்தை நடத்திவந்தனர்.

'எண்பது சதவிகித உத்தியோகமும், குடியிருப்பு வீடுகளும் மகாராஷ்டிரர்களுக்கே ஒதுக்கவேண்டும்' என்றும், 'தென்னிந்தியர்களை இங்கு நீடிக்கச் செய்யக்கூடாது' என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

சிவசேனையின் தலைவரான பால் தாக்கரே திறந்த டிரக் வண்டியில் நின்றபடி வந்தார். அவர்தம் நெற்றியில் சிவப்புக் குங்குமத்தைப் பூசிக்கொண்டிருந்தார்; அவருக்கு அருகில், குங்கும நிறத்தில் உள்ள சிவசேனையின் கொடி பறந்துகொண்டிருந்தது.

சட்டமன்றத்திற்கு 100 கெச தொலைவில் உள்ள 'காலகோடா' என்னுமிடத்தில் போலீசார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தியதும், திரு. பால்தாக்கரே கீழே இறங்கி, முதலமைச்சரை ஊர்வலத்தினரிடையே பேசுமாறு அழைப்பதற்காக சட்டமன்ற மேலவை கூடும் மண்டபத்திற்குள் நுழைந்தார்; அவருடன் மற்றும் சிலரும் சென்றனர்; ஆனால், அவர்களின் வேண்டுகோளை முதலமைச்சர் ஏற்க மறுத்தார்; உடன், கோரிக்கை மனு ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டு அகன்றனர்.

பம்பாயில் வேலைகளிலும் தென்னிந்தியர்களே நிரம்பியிருப்பதாகவும், இதனால் மகாராட்டிர மக்கட் தொகை குறைந்துவருவதாகவும், தமிழரும் மலையாளிகளுமே பம்பாயை ஆதிக்கம் செலுத்தும் நாள் வந்துவிடக்கூடுமென மராட்டியர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

பின்னர் ஊர்வலத்தினரிடையே பேசிய திரு. தாக்கரே, ஆகஸ்டு 15-ம் நாள்முதல் சிவசேனை இயக்கத்தினர், மராத்தி மொழியில் எழுதப்பட்டில்லாத பெயர்ப் பலகைகளையெல்லாம் தார் கொண்டு அழிக்கப்போவதாக அறிவித்தார்.

அடுத்துவரும் மாநகராட்சித் தேர்தலில் சிவசேனை, பம்பாய் மாநில காங்கிரசை முறியடிக்க முயற்சி செய்யும் என்றும், சிவசேனை ஊழியர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகப் போராடும் முயற்சிகளில் தளர்ந்துவிடக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

'அடிப்படைத் தொழில்கள் பொதுத் துறையிலேயே இயங்க வேண்டும்'

முதலமைச்சர் அண்ணா கருத்து

சென்னை, ஜூலை 20—

"நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு, அடிப்படைத் தொழில்களெல்லாம் பொதுத்துறையின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கருத்தறிவித்தார்கள்.

சென்னை—மீனம்பாக்கம் விமான நிலையத்தில், இந்தியன் ஆயில் நிறுவனத்தின் எவியேஷன் சர்வீஸ் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"மின்சாரமும், பெட்ரோலும் எந்த அளவுக்குப் பயன்படுகிறதோ அந்த அளவுக்கு நாடு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பது பொருள். நமது நாட்டில் தொழில் வளர்ச்சி இந்த அளவுக்குப் பெருகிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருவதாகும்."

கட்சிக்காரர்களைக் கவர்னராக்குவதன் விளைவு

ஜெயப்பிரகாஷ் நாராயணன் எச்சரிக்கை

பாட்னா, ஜூலை 21—

மத்தியப்பிரதேச சட்டமன்ற நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு கவர்னர் எடுத்த நடவடிக்கையைக் கண்டித்து, கட்சிக்காரர்களை கவர்னர்களாக நியமிப்பதன் அபாயத்தைச் சுட்டிக்காட்டிய ஜெயப்பிரகாஷ் நாராயணன், கட்சி மாறுபவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதாவது :—

"அனைத்துக்கட்சித் தலைவர்களிலும் போதுமான நாட்டுப்பற்று உள்ளவர்கள் இன்னமும் இருக் இருக்கின்றனர். கட்சி மாற விரும்புபவர் தம் பதவிலிருந்து விலகி தாம் மாற விரும்பும் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில், அத்தகையவர்களுக்கு எந்தக் கட்சியிலும் இடமளிக்கக்கூடாது என்ற உடன்பாட்டுக்கு, நாட்டுப்பற்றுள்ள தலைவர்கள், வரவேண்டும்.

"இவ்வாறு செய்யாவிடில், இந்தியாவில் பிரதிநிதித்துவ அரசு என்பதும் கட்சிமுறை என்பதும் வெறும் கேலிக்கூத்தாகிவிடும். அரசியல் தலைவர்களிடையே ஓரளவு நியாயமான துணிவு இருக்குமானால்-இதனை எளிதில் சாதிக்கமுடியும்."

ஜூலை 25--இன்சூரன்சு ஊழியர் வேலை நிறுத்தம்

கணக்கீட்டு இயந்திரத் திணிப்புக்கு எதிர்ப்பு

இந்தியா முழுவதிலும் 40,000 பேர் ஈடுபடும் அறப்போர்

சென்னை, ஜூலை 19—

ஆயுள் இன்சூரன்சு—கழகத்தில் கணக்கிடும் இயந்திரத்தைப் புகுத்துவதை எதிர்த்து, ஜூலை 25-ஆம் நாள் இந்தியா முழுவதிலும் உள்ள இன்சூரன்ஸ் நிறுவன ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளனர்.

அனைத்திந்திய இன்சூரன்சு ஊழியர் சங்கம் இந்த வேலைநிறுத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தங்களின் நியாயமான போராட்டத்தை விளக்கியும், அரசின் பிடிவாதப் போக்கால் நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் விளையவிருக்குக் கேடுபாடுகள் குறித்தும், மேற்படி சங்க நிர்வாகிகள் சென்னைச் செய்தியாளர்களிடம் இன்று விளக்கமாகப் பேசினர்.

மேற்படி சங்க தென் வட்டாரக் கூட்டமைப்பின் போராட்டக் குழுத் தலைவர் திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி, அனைத்திந்தியச் சங்கத்தின் கூட்டுச் செயலாளரான திரு. கே. பி. மேனன், சென்னை வட்டாரச் செயலாளர் திரு. எஸ். இராஜப்பா ஆகியோர், சென்னை சுவாகத் ஓட்டலில் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் பேசினர்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இயந்திரக்கருவித் திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்சூரன்சு ஊழியர்கள், பல்வேறுவகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர்.

முதலில் ஒரு நாள், கால்மணி நேரம் தாமதித்து வேலைக்கு வந்தனர்; அடுத்து 'சட்டப்படியே வேலை செய்வது' என்ற கொள்கையை மேற்கொண்டனர்; அதனையடுத்து, சென்ற நவம்பர் 25-ம் நாள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

"இத்தனைக்குப் பிறகும் நிர்வாகத்தினரோ, அரசினரோ தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோரின் ஊதியத்தைப் பிடிப்பதிலும், பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும்தான் நிர்வாகத்தினர் நடந்துகொள்ளுகின்றனரே தவிர, போராட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டவர்களாகத் தெரியவில்லை" என்று ஊழியர் சங்கத்தலைவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

இப்போது, 'ஜூலை 25-ம் நாள் நடைபெறவிருக்கும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளும் ஊழியர்களின் ஒரு நாள் ஊதியம் பிடித்துக் கொள்ளப்படும்' என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

இராஜாஜி, குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி, திட்டக் குழுத் துணைத் தலைவர் டி. ஆர். காட்கில், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா போன்ற நாட்டின் முக்கிய தலைவர்களெல்லாம், இன்சூரன்சு ஊழியர்களின் வாதத்தை ஏற்று, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றனர்.

ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தில் மொத்தம் 40,000 பேர் வேலை பார்க்கின்றனர். கணக்கிடும் இயந்திரம் திணிக்கப்பட்டால், இவர்களில் 30,000 பேர் வேலை இழக்க நேரிடும் என்பதுடன், மேற்கொண்டு புதிதாக வேலைக்கு ஆள் எடுக்கப்படுவதும் இருக்காது. இதனால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும்.

கணக்கீடும் இயந்திரத்தை அமெரிக்காவிலிருந்து தருவித்தால் அவற்றிற்கு வாடகையாக மட்டும் ஆண்டுதோறும் ரூ. 75 இலட்சம் கொடுக்கவேண்டியிருக்கும். அந்த இயந்திரத்துக்கான உதிரி உறுப்புக்கள்—துணைப் பொருள்களெல்லாம்கூட வெளிநாட்டிலிருந்துதான் தருவிக்கப்பட வேண்டும்; இதன்மூலம், அந்நியச் செலாவணி வீணாக்கப்படும்.

தற்போதைய இந்தியாவின் பொருளாதார நிலையில் கணக்கிடும் இயந்திரத் திணிப்பு, நம் நாட்டுக்குப் பொருந்தவே பொருந்தாது என்பதை, இன்சூரன்சு ஊழியர்கள் பல்வேறு புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்தனர்.

தமிழக—கேரள—மேற்கு வங்க அரசுகள், கணக்கிடும் இயந்திரத் திணிப்புக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருப்பதற்காக, ஊழியர் சங்கத்தினர் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், தங்களின் நியாயமான போராட்டத்துக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்துதவ வேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்,

'எழுச்சி நாள்' பற்றி உருக்கு அமைச்சர்!

சென்னை, ஜூலை 21—

மக்களவையில் திருமதி தாரகேசுவரி சின்காவின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த உருக்குத் துறையமைச்சர் திரு. சென்னா ரெட்டி,

"தமிழகத்தின் ஆளுங் கட்சியான தி. மு. க. சேலம்—தூத்துக்குடித் திட்டங்களுக்காக அண்மையில் ஒரு கிளர்ச்சி நடத்தப்போவதாகச் செய்தி படித்தேன்"

என்றார்.

"இதுபற்றி அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன ?"

என்று கேட்டதற்கு,

"எந்தவிதப் பொருளாதாரப் பிரச்சினையையும் ஆராய்ந்து விருப்பு வெறுப்பின்றி முடிவு செய்வதற்கு இடையூறாக அமையக்கூடிய சூழ்நிலை எதுவும் எழாது என்று அரசு நம்புகிறது"

என்றார்.

சேலம் -- தூத்துக்குடி எழுச்சி நாள் பொதுக்கூட்டம்

23-7-67 மாலை 7-மணிக்கு -- திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர் : நீலநாராயணன்

பேசுவோர் :

அமைச்சர்
மு. கருணாநிதி
மூக்கையா தேவர்
ஏ. கே. ஏ அப்துஸ் சமது
கே. ஆர். நல்லசிவம்

சா. கணேசன்
அனந்தன் நம்பியார்
ஏ.எஸ்.கே. அய்யங்கார்
ஆறுமுகசாமி
கு. மா. பாலசுப்பிரமணியம்

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 6 (22—7—67) சனி

சூலை 23!

★

சேலம் உருக்காலைக் கோரிக்கையை வற்புறுத்தவும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தை நிறைவேற்றிவைக்கவும் தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டாகவும், தனித் தனியாகவும் இன்றுவரை முயற்சி செய்துவந்திருக்கின்றன.

இவ்வகையில், எதிர்க் கட்சி என்ற முறையில் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற வரையில், முன்னேற்றக் கழகம், குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொண்டுவந்திருக்கிறது.

இதுபோன்றே காங்கிரசுக் கட்சியும், கட்சி முனையில் நின்றும், ஆட்சி முனையில் நின்றும் முயற்சி செய்துவந்திருக்கிறது.

இத்திட்டங்களை நிறைவேற்றிவைப்பதில் இந்திய அரசை இணங்கச் செய்யத் தொழிலதிபர்களும், குறிப்பிடத்தக்க வணிகர்களும் முனைப்பாக முயற்சித்துள்ளனர்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் தூதுக் குழு, இந்திய அரசைச் சந்தித்து, 'சேலம் உருக்காலையை உடனடியாக நிர்மாணிக்க வேண்டும்' எனக் கோரிக்கொண்டிருப்பதும், இத்தொடர்பில் நினைவுகூரத்தக்கது.

இத்தகைய இமாலய முயற்சிக்குப் பின்னரும் இந்திய அரசு, மேற்படி இரண்டு திட்டங்களில் ஒன்றான சேலம் உருக்காலைத் திட்டத்தைத் துவக்குவதில், காலம் கடத்திக்கொண்டேவந்திருக்கிறது. இதுதான் இன்றுள்ள நிலை.

சேலம் உருக்காலைத் திட்டத்தின் நிலை இதுவென்றால், திட்டமிடுகின்ற பணி அனைத்தும் முடிக்கப்பெற்று—வரையறை செய்தபடி பணியும் துவங்கப்பட்டு—செயலாற்றப்பட்டுவருகின்ற நேரத்தில், 'தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைக் கைவிட்டுவிடலாமா' என்ற குழப்படிக் கருத்துக்கு, இந்திய அரசு இடம் கொடுத்துவிட்டிருக்கிறது.

மேற்படி திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றி நிறைவேற்றுவதில், தயக்கம் காட்ட முனைந்திருக்கிறது இந்திய அரசு.

தனக்கேற்பட்டிருக்கின்ற இத்தயக்கத்தின் விளைவாக, திட்டத்திற்குத் தேவைப்படக்கூடிய நிதியை ஒதுக்குவதில், 'பேரம்' பேசும் முறையைக் கையாள முன்வந்திருக்கிறது இந்திய அரசு.

திட்டத்திற்கான பணம் ஒதுக்குவதில் மட்டுந்தான் இந்திய அரசு இப்'பேரம்' பேசுகின்ற போக்கைக் காட்டிக்கொள்ளுகிறது என்பதில்லை.

'திட்டத்திற்கான ஒப்புதலே இதுவரை தரப்படவில்லை' என்ற வெடிகுண்டை வீசியதுடன், 'திட்டத்தின் பயனை மீண்டும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்றும் அறிவித்து, அதற்கான ஆய்வுக் குழு அமைப்புப் பற்றிய விளக்கத்தையும் கூறியிருக்கின்றார்—இந்திய அரசின் அமைச்சர்.

திட்டம் பற்றிய இக்கருத்தை வெளியிட்டிருக்கின்ற இதே நேரத்தில், 'திட்டத்தை நிறுத்திவிடாமல் தொடர்ந்து செயல்படுத்தப்படும்' என்ற பொருள் தரத்தக்க வகையில், திட்டப் பணிகளுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 50 இலட்சம் ரூபாயை இரட்டிப்பாக்கி இருக்கிறது இந்திய அரசு.

சூலை இருபத்து மூன்றும் நாள், 'எழுச்சி நாள்' கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்ததற்குப் பின்னர், ரூ. 50 இலட்சம், ரூ. 100 இலட்சமாக உயர்த்தப்பட்டிருப்பதால், இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கத்தான் செய்கிறது என எவரும் கருதுவர். அக்கருத்தில உண்மை இல்லாமலிருக்க நியாயமில்லை.

ஐம்பது இலட்சம் ரூபாய், நூறு இலட்சம் ரூபாயாக ஆகியிருப்பதைக் காட்டி, 'எழுச்சி நாள்' கொண்டாடுவதைக் கைவிட வேண்டும் எனக் கோருகின்றார்—இந்திய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர். அவ்வாறு கோரிக்கொள்ள அமைச்சருக்கு உரிமை உண்டு. அவர் கருத்துப்படி, அவர் கோரிக்கையில் நியாயமும் இருக்கலாம்.

அதைவிட, 'எழுச்சி நாள்' கொண்டாடுவதில் நமக்கிருக்கக் கூடிய உரிமையும் நியாயமும், மிகுதியானதாகும்.

'எழுச்சி நாள்' கொண்டாடுவதைக் கைவிடவேண்டும் என்ற தமது கோரிக்கைக்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் சுட்டிக் காட்டுகின்ற காரணம், பொருத்தமற்றதாகவும் உள்ளது.

'எழுச்சி நாள்' கொண்டாடுவது தமது கரத்தின் வலிவைக் குறைத்துவிடக்கூடும் என அச்சம் தெரிவித்து, அந்த நாளைக் கைவிட்டுவிடும்படி கோரியிருக்கின்றார் மத்திய அமைச்சர்.

தூத்துக்குடித் திட்டத்தை நிறுத்திவிடாமல் தொடர்ந்து செயலாற்றி முடிக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்களுக்குள்ள ஆர்வத்தையும் விருப்பத்தையும், இந்திய அரசுக்குத் தெளிவாக உணர்த்துவதுதான், 'எழுச்சி நாள்' கொண்டாட்டத்தின் அடிப்படை நோக்கம்.

இந்திய அரசையோ, போக்குவரத்துத் துறை அமைச்சகத்தையோ கண்டிக்கும் கருத்துக்கொண்டிருப்பதல்ல—'எழுச்சி நாள்'.

போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் மீது அவநம்பிக்கை தெரிவிப்பதுமல்ல—'எழுச்சி நாள்',

'எழுச்சி நாள்'—அமைச்சர் கூறியிருப்பதுபோல்—அவருடைய கரத்தின் வலிவைக் குறைக்கக்கூடியதல்ல; அதற்கு மாறாக அவருடைய கரத்தை மேலும் வலிவுபடுத்தக்கூடியதாகும்.

தூத்துககுடித் திட்டம் இறுதியில் நிறுத்தப்பட்டுவிடாமல் தொடர்ந்து முடிக்கப்பெறவேண்டும் என்பதில், தமிழ் மக்கள், ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர் என்பதை 'எழுச்சி நாள்' வெளிப்படுத்தப்போகிறது.

'எழுச்சி நாள்' வெளிப்படுத்தக்கூடிய தமிழ் மக்களின் ஒருமித்த கருத்து, திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் தமக்குள்ள அக்கறையை இந்திய அரசின் அமைச்சர் உணரச்செய்வதற்குப் புதிய வலிவாக அமைகிறது.

'எழுச்சி நாள்' நிகழ்ச்சியால், போக்குவரத்துத்துறை அமைச்சர், திட்டத்திற்கு நிதி உதவ நிதி அமைச்சரிடம் செய்யக்கூடிய வாதத்துக்கு புதிய நியாயத்தையும், தெம்பையும் பெறப்போவது உறுதியிலும் உறுதி.

எனவே, 'எழுச்சி நாள்' குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் வெளியிட்டிருக்கின்ற அச்சம், அடிப்படை இல்லாதது.

தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்றிவைப்பதிலும், சேலம் உருக்காலைத் திட்டத்தை நிர்மாணிப்பதிலும், தமிழ் மக்கள் தங்கள் உள்ளுணர்வை வெளிப்படுத்துகின்ற நாள்தான் 'எழுச்சி நாள்.'

சூலை 23-ம் நாளின் சிறப்பு இதுதான்.

—கா. க.

பழைய வரலாறு அல்ல எங்களைப் பதவியில் அமர்த்தியது

வசதியில்லாமலேயே வளர்ந்தோம்-- புதிய வரலாற்றை உருவாக்குகிறோம்

உண்மையான ஜனநாயகவாதிகளாகச் செயல்படுவோம்

நாட்டு மக்களுக்கு அறிஞர் அண்ணா வழங்கும் உறுதிமொழி

தமிழகச் சட்டமன்றத்தில் நிதி ஒதுக்கீடு மசோதா மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணா ஆற்றிய உரை வருமாறு:—

நெஞ்சத்தின்மீது அழுந்தும் சுமை!

"இந்த நாள், தனிப்பட்ட முறையிலே கவனித்தாலும், எங்களுடைய கட்சி வரலாற்று முறையிலே கவனித்தாலும் நாங்கள் எல்லாம் வாழ்நாளிலே மிகவும் பொறுப்போடு கவனிக்க வேண்டிய முக்கிய நாளாகும்.

ஒரு மாநில அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு—சட்டமன்றத்திலே பெருவாரியான இடங்களைப் பெற்று அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே, இந்த அரசினுடைய நிர்வாகத்திற்குத் தேவையான பெரும் பொறுப்பை—அதற்குத் தேவையான நிதி வசதியைச் சட்டமன்றத்தைக் கேட்டுப் பெறுவது என்ற ஒரு பெரிய காரியத்தின் முக்கியத்துவம் பெற்ற நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது.

இன்றையத்தினம் இந்த நாளினுடைய முக்கியத்துவத்தை எண்ணிப்பார்க்கும் நேரத்தில், எனக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்—எதிர்க் கட்சித் தலைவர் உட்பட எடுத்துச் சொன்ன பல கருத்துக்களைவிட, தமிழ்நாட்டு மக்கள் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கும் புதிய பொறுப்பை — அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்திருக்கும் அளவு கடந்த நம்பிக்கையை—அவர்கள் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் பல்வேறு வகையான வசதிகளை — பல்வேறு வகையான நன்மைகளை—பல்வேறு வகையான நலன்களை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அறிவாற்றலையும், அதைச் செய்வதற்கு வேண்டிய பொறுப்புணர்ச்சியையும், அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் மற்றவர்களிடத்திலிருந்து பெறக்கூடிய வாய்ப்புக்கள் நிரம்ப இருக்க வேண்டுமே என்ற எண்ணம்தான் என்னுடைய நெஞ்சத்தை அழுத்திக் கொண்டு இருக்கிறது.

இதிலே, எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் எடுத்துச் சொல்லும் குறைபாடுகள்—குத்தல் பேச்சுக்கள்—கிளறிவிடுவது—இவைகளெல்லாம் எனக்கு இந்தப் பயத்தைக் குறைத்துக் கொள்ளப் பயன்படுகின்றனவே தவிர, எனக்கு எரிச்சலைக்கூட உண்டாக்கவில்லை!

ஆனால், முதலிலே நான் இந்த அவையிலேயிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, நாங்கள் மேற்கொண்டுள்ள புதியபொறுப்பை செம்மையான முறையிலே நிறைவேற்ற–பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற எங்களுக்கு எல்லாத் தரப்பு மக்களுடைய நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், வாழ்த்தும் நிரம்ப கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுதான்.

அடக்க உணர்ச்சியே அதிகமாகிறது!

ஒரு நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால், உண்மையிலேயே, 'எப்படி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்' என்பதுபற்றி நம்முடைய காங்கிரசு நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கும் வியப்பைவிட எனக்கு அதுபற்றி மிகுதியான வியப்பு உண்டு.

பத்தாண்டுகளுக்கு முன்னால் சட்டமன்றத்திற்குள்ளே, நாங்கள் வந்து சேர்ந்தோம். பத்தாவது ஆண்டிலே, இரண்டு முறைகள் சட்டமன்றத்தில் இடம் பெற்று, மூன்றுவது முறையாக ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுகிற அளவிற்கு நாட்டு மக்களின் பேராதரவு கிடைத்திருக்கிறது.

மக்கள் நம்மிடையே காட்டியிருக்கும் அன்பு உணர்ச்சி—ஆதரவு உணர்ச்சி வேறுபல கட்சிகளுக்குக் கிடைக்காத வகையிலும் தன்மையிலும் நமக்குக் கிடைத்திருக்கும் நேரத்தில், எனக்குப் பெருமித உணர்ச்சி அல்ல — அடக்க உணர்ச்சி, துவக்கநாளிலிருந்து அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பந்தமில்லை-பாசமில்லை! தொடர்பு மட்டுமே உண்டு!

காங்கிரசுக் கட்சி அரசாளுவதற்கு முன்னால் உள்ள அவர்கள் வரலாறுகளும், அவர்களுக்குக் கிடைத்த தலைவர்களும், அவர்கள் நடத்திய போராட்டங்களும் இன்று காங்கிரசில் உள்ள பெரும்பாலானவர்களுக்குச் சொந்தம் இல்லை—பந்தம் இல்லை—பற்று இல்லை—பாசம் இல்லை! தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு மட்டும்தான் இருக்கிறது!

"இது எங்கள் வரலாறு—இது எங்கள் கட்சி—இவர்கள் எங்கள் தலைவர்கள்" என்று அவர்கள் சொல்லிக்கொள்ளுகின்ற அளவுக்கு, ஒரு பெருமித உணர்ச்சி பெறத்தக்க பெரிய அளவிலே அவர்களுக்கு அமைந்திருக்கிறது.

வரலாற்றின் துணையுடன் வரவில்லை நாங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் பத்து ஆண்டுகளுக்குள் சட்டமன்றத்தில் இடம் பெறத்தக்க அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது.

இதற்கு முன்னாலே இருந்த வரலாற்றின் துணையைக்கொண்டு நாங்கள் பதவிக்கு வந்தவர்கள் அல்லர்!

நாங்கள் பதவிக்கு வந்திருக்கிறோம்— ஒரு வரலாற்றையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்!

இந்த ஒரு வேகத்தை நம்முடைய எதிர்க் கட்சித் தோழர்கள் உணருவார்களானால், அவர்கள் இவ்வளவு அதிகமான அளவுக்கு எங்களைப் பற்றித் தாக்கிப் பேசலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு வந்திருக்க முடியாது!

ஆதரவு கேட்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது!

சாதாரணமாக வரலாறு சொல்லுவார்கள்—'ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் தெரு விளக்கிலே படித்துக் கொண்டே ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனார்' என்று!

அதைப்போல்,நாங்கள் ஏற்படுத்தி நடத்திக்கொண்டுவருகிற திராவிட முன்னேற்றக்கழகம், எந்த விதமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் பெறாத நாளிலே இருந்து பொதுமக்களிடத்திலே பெற்றிருந்த தொடர்பு காரணமாகவே இந்த நிலைமைகளுக்கு நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும் நேரத்தில்—எப்படி ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் எளிய நிலையிலே இருந்து உயர் நீதிமன்றத்திற்கு வந்த பிறகும், அவர், 'உயர் நீதிமன்ற நீதிபதிகளிலேயே மிகச் சிலாக்கியமானார்' என்ற பெயரை எடுத்தாரோ—அப்படிப்பட்ட ஒரு நற்பெயரை எடுக்கவேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு இயற்கையாகவே இருக்கிறது.

எங்களுக்கு அந்த நற்பெயர் கிடைக்கவேண்டுமானால், எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் நிச்சயமாகத் தேவை.

எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல—அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் எங்களுக்கு மிக மிகத் தேவை.

அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல — மக்களுடைய பேராதரவு எங்களுக்கு நிரம்பத் தேவை.

ஆனால், இவைகளை எல்லாம் கேட்டுவிட்டால் மட்டும் கிடைத்துவிடாது!

நாங்கள் செய்யவேண்டியவைகளை எடுத்துச் சொல்லி, 'இந்தக் காரியங்களையெல்லாம் நாங்கள் செய்துகொண்டிருப்பதாலே, தொடர்ந்து எங்களுக்கு உங்களுடைய ஆதரவைக் கொடுங்கள்' என்று கேட்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது.

பிரச்சினைகளை தீர்க்கத் தயங்கமாட்டோம்!

ஆகவேதான், இந்த நிதி ஒதுக்கீடு பிரச்சினை வருகின்ற நேரத்தில், நான் உள்ளபடி சிறிதளவு எழுச்சி வயப்பட்டவனாகவேகூட இருக்கிறேன்.

வழக்கமாக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறபோது

(4-ம் பக்கம் பார்க்க)

'எழுச்சி நாள்' பொதுக்கூட்டங்கள்

23--7--67

செங்கம்

இரவு 7 மணிக்கு சிவன் கோயில் எதிரில்; தலைவர் : அ. ந. அரங்கநாதன்; பேசுவோர் : பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ., எம். எஸ். இராதா கிருட்டினன், தொ. கோவிந்தசாமி, து. கண்ணன், சி. இராமலிங்கம், ஆர். இராமசாமி, ஏ. வி. சுப்பராயன், பி. வி. அகமத் பாட்சா, ஜே. ஏ. ஜப்பார், டி. அப்துல் சத்தார்.

எட்டயபுரம்

மாலை 6 மணிக்கு பட்டத்து விநாயகர் கோயில் அருகில்; தலைவர் : சு. வெயிலுகந்தன்; பேசுவோர் : எம். அந்தோணிசாமி, எஸ். அழகர்சாமி எம்.எல்.ஏ., எம். ஆர். சனுர்த்தனம் பி.எஸ்சி., சண்முக வேலாயுதம், ஆர். கே. சாமி.

தஞ்சாவூர்

மாலை 6 மணிக்கு திலகர் திடலில்; தலைவர் : ப. நாராயணசாமி; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், எஸ். சுயம்பிரகாசம் பி.ஏ.பி.எல்., கே. டி. இராசு, என். வெங்கடாசலம், கா. இராமச்சந்திரன், கே. ஆர். நாடிமுத்து, அஜீஸ்.

அருப்புக்கோட்டை

இரவு 7 மணிக்கு புளியம்பட்டி தியாகராய வாலிபர் சங்கம் எதிரில்; தலைவர் : சிவ. சண்முகசுந்தரனார்; பேசுவோர் : எம். எஸ். இராமசாமி, ச. அமுதன் பி.ஏ., சவுடி எஸ். சுந்தரபாரதி எம்.எல்.ஏ., ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., எம். கிருட்டினன், தி. மு. கலுசுவலிங்கம், ஏ. தாவுத்கான், மற்றும் பலர்.

மேட்டுப்பாளையம்

இரவு 7 மணிக்கு காந்தியார் திடலில்; பேசுவோர் : கேரள சுந்தரம், எம். ஏ. ரெசாக், எம். கே. கருப்பண்ணன், டி. ரங்கசாமி, வி. கிருட்டினன், வெங்கடாசலம், பி. எஸ். கே. தீன், சீரங்கம், கே. வெள்ளிங்கிரி, வெ. செகநாதன், உன்னி பாலன்.

கூவம்

மாலை 6 மணிக்கு; தலைவர் : பெ. திருநாவுக்கரசு; பேசுவோர் : என். எஸ். பலராமன், இரா. தண்டபாணி, ஆர். மணி, எஸ். கே. கோவிந்தசாமி, ஆர். திருநாவுக்கரசு, க. நடராசன், சா. கோவிந்தராசன், ஆ. நடராசன், கு. க. சோணாசலம், மற்றும் பலர்.

கும்பகோணம்

மாலை 6 மணிக்கு சாரங்கபாணி சன்னதியில்; தலைவர் : வி. பராங்குசம்; பேசுவோர் : எல். கணேசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., பி.டி. இராகவன், கோ. கலிவரதன் பி.ஏ., பி. கே. இ. அப்துல்லா, எஸ். ஆர். பாலகிருட்டினன், ஏ. வி. இராமசாமி, நெ. அ. கிருட்டினன்.

திருவள்ளூர்

மாலை 6 மணிக்கு கடை வீதியில்; தலைவர் : ஏ. கோவிந்தசாமி எம்.சி.; பேசுவோர் : எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., எம்.பி., எஸ். எம். துரைராசு எம்.எல்.ஏ., து. எத்துராசன், குண்ணவலம் மணி, ஜாக்சன் ஜார்ஜ், மற்றும் பலர்.

வேலூர்

மாலை 6 மணிக்கு; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா; இரா. தர்மலிங்கம், எம். பி. சாரதி எம்.எல்.ஏ., ஏ. நரசிம்மன் எம்.எல்.ஏ.

சூலூர்

மாலை 6 மணிக்கு; பேசுவோர் : இ. பே. சுப்பிரமணியம், வி. கே. என். இராதா.

திருச்சி

மாலை 6 மணிக்கு நகர்மன்றத் திடலில்; தலைவர் : எம். இராமையா பி.ஏ.பி.எல்.; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, அன்பில் தருமலிங்கம், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., ஏ. துரைராசு எம்.பி., எஸ். சுப்பையா எம்.எல்.ஏ., அப்துல் வகாப் எம்.எல்.சி., எஸ். கே. கே. இராதா கிருட்டினன், க. மு. சீனிவாசன், எம். மீனாட்சிசுந்தரம் பி.ஏ.பி.எல்., அ. நடராசன்.

குறிஞ்சிப்பாடி

மாலை 6 மணிக்கு; தலைவர் : கு. த. பெ. பழனியப்பன்; பேசுவோர் : இரா. சாம்பசிவம், என். இராசாங்கம் எம்.எல்.ஏ., கு. வெ. பட்டாபி, தா. நாராயணசாமி.

காரைக்கால்

மாலை 6-மணிக்கு முருகையனார் திடலில்; தலைவர் : எஸ். இராமசாமி பி.எஸ்சி.,பி.எல்.; பேசுவோர் : கூடலரசன், கோ. இ. மு. இப்ராகிம் எம்.எல்.ஏ., எஸ். கே. தம்பிசா, என். ஜி. இராசன், எம். சுப்பிரமணியன், எம். இப்ராகிம், பொன். இராமசாமி, ப. அ. கரீம், வ. பண்டரிநாதன்.

மோகனூர்

மாலை 6-மணிக்கு அழகிரி திடலில்; தலைவர் : கே. வேலுசாமி; பேசுவோர் : சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., மணிமாறன், கே.எஸ். சோமு, கே. எஸ். இராதாகிருட்டினன், பி. ஆறுமுகம், எம். சுப்பிரமணியம், வி. மணிவாசகம், சிங்காரம், எம். எஸ். கந்தசாமி.

இராசபாளையம்

மாலை 6-மணிக்கு நகராட்சி மன்ற எதிரில்; தலைவர் : ஆ. பூச்சப்பன்; அனைத்துக் கட்சித் தோழர்களும் பேசுவர்.

வேலாயுதம்பாளையம்

மாலை 6 மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர் : டி. பி. மூர்த்தி; பேசுவோர் : நன்னிலம் நடராசன், வை. இரத்தினவேலு, கே. கருப்பையா, நாவரசன், பி. நாராயணன், எம். இராசப்பன்.

அம்மாபேட்டை

மாலை 6 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர் : துரை. கிருட்டினமூர்த்தி; பேசுவோர் : ந. சாமிநாதன், சேவியர், கிரேசின் சேவியர், அ. ஆரோக்கியசாமி, இராமமூர்த்தி, எம். ஜி. இராதாகிருட்டினன், ப. சிவேந்திரன், எஸ். தனசாமி, மற்றும் பலர்.

பாலவிடுதி

இரவு 7 மணிக்கு; தலைவர் : உ. கார்மேகம்; பேசுவோர் : இரா. துரையரசன், எம். கே. மருதை, வே. இளமாறன், இர. சிவராமன், செ. மா. பாலசுப்பிரமணியன், எம். ஆர். மாணிக்கம், மற்றும் பலர்.

உடுமலைப்பேட்டை

இரவு 7 மணிக்கு கருணாநிதி திடலில்; தலைவர் : ஏ. எஸ். மணி; பேசுவோர் : சி. டி. தண்டபாணி எம்.பி., உசுமான், வி. பி. இராமசாமி, சாகுல் அமீது, ஜி. ரங்கசாமி, ஆர். எம். இராமசாமி பி.ஏ., பி.எல்., சுப்பிரமணியம்.

உசிலம்பட்டி

மாலை 6 மணிக்கு தேவர் திடலில்; தலைவர் : கே. பி. சிவன் காளை; போசுவோர்: தமிழ்மாறன், இராசா, உ. மா. கண்ணுச்சாமி, எம். ஓ. இராமசாமி, வி. அய்யர், ம, பரமநாதன், சுப்பையா, அன்னக்கொடி, பி. எஸ். மாணிக்கம், கோ. நடராசன் மற்றும் பலர்.

காடையாம்பட்டி

மாலை 6-30 மணிக்கு சந்தைப் பேட்டையில்; தலைவர் : க. இராசகோபால்; பேசுவோர் : எஸ்.ஆறுமுகம் எம்.எல்.ஏ., ஏ.பி. அப்புசாமி பி.ஏ.,பி.எல்., மற்றும் பலர்.

ஆலங்குடி

மாலை 6 மணிக்கு காந்தி பூங்காவில்; தலைவர் : கே.வி. சுப்பையா; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., பி. முருகையன், பெரி. குமாரவேல், மு. நடராசன், மு. சுந்தரக்கண்ணு, பி. எம். ஹாஜி முகமது, அ. பெரியண்ணன்.

தண்டிகேசுவரம்பாளையம்

இரவு 7 மணிக்கு சாவடித் திடலில்; தலைவர் : பெ. கு. முத்துசாமி; பேசுவோர் : கே. ஆர். கோவிந்தன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., கோபி ஜி. என். இராசு, சின்ன இருசன், ஆ. சின்னையன், வி. இராமலிங்கம், பி. அர்த்தனாரி, டி. பி. ஆறுமுகம், டி. சி. அரங்கசாமி, ஐ. கந்தசாமி, இளம்பரிதி, டி. சி. குமாரசாமி.

வீரசோழன்

இரவு 7 மணிக்கு முத்தூரணித் திடலில்; தலைவர் : பி. என். கே. சாகுல் அமீது; பேசுவோர்: ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., எம். இராசன், முகமது குலாம் உசேன், வி. ஏ. சிவன், இரா. கிருட்டினன், ஏ. ஓ. எஸ். இபுராகிம், எம். எம். நெயினு முகமது.

ஆண்டிப்பட்டி

மாலை 6 மணிக்கு, அண்ணா திடலில்; பேசுவோர் : சேதுராமன் பி.ஏ.,பி.எல்., கே. வி. வேலுச்சாமி, எம். எஸ். பால்ராசு.

மா. பொடையூர்

மாலை 6 மணிக்கு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர் : வெ. பெரியசாமி; பேசுவோர் : க. இராமலிங்கம் பி.ஏ.,பி.எல்., அ. கிருட்டினன் எம்.எல்,ஏ., டி. ஆர். சுந்தரம், அரங்கசாமி, திராவிடமணி, ஆர். வடமலை, ந. இராசு, துரை.கோவிந்தன்.

கப்பல் கட்டணத்தை உயர்த்துகிறது இரஷ்யா

டெல்லி ஏற்றுக்கொள்கிறது

புதுடில்லி, ஜூலை 20—

இரஷ்யாவிலிருந்துவரும் மண்ணெண்ணெய்க் கட்டணத்தை சுமார் 80 சதவிகிதம் அதிகரித்திருப்பதை இந்திய அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது.

சூயஸ் கால்வாய் மூடப்பட்டிருப்பதால், கப்பல்கள் சுற்றிக் கொண்டுவருவதைக் கருதி டன் ஒன்றுக்கு ரூ. 31.50 வீதம் கட்டணத்தை உயர்த்துமாறு இரஷ்ய கோரியது.

இப்போது ரூ. 34.50 முதல் ரூ. 45 வரை உள்ளது. இனி ஒரு டன்னுக்கான கட்டணம் ரூ. 66 முதல் 76.50 வரை அதிகரிக்கும்.

தமிழகத்தில் தமிழ் கற்பிக்காத பள்ளிகளா?

மத்திய அரசுக்கு மாநிலக் கல்வி அமைச்சர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 19—

"மத்திய அரசின் ஆதரவுடன் தமிழகத்தில் அமைந்துள்ள பள்ளிகளில் தமிழ் மொழியும் கற்பிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு ஆலோசனை கூறியிருக்கிறது"

என, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மேலவையில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

அவர் மேலும் இதுபற்றிக் கூறியதாவது :—

"இப்பொழுது இந்தப் பள்ளிகளில் இந்தியும், சமஸ்கிருதமும் மட்டுமே கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இது மும்மொழிக் கொள்கைக்கு முரணானது; இதுபற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் வட்டார மொழி கற்பிக்க வகை செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்டது. இதற்கு மத்திய அரசு எழுதிய பதிலில், ஒரு கௌரவத் தமிழாசிரியரை நியமித்துக்கொள்ளலாம் என்றும் இதற்கான செலவில் பாதியை மாநில அரசு ஏற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் இதற்கு மாநில அரசு இணங்கவில்லை; முழு மானியமும் மத்திய அரசே தரவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது."

தமிழக மின்சாரக் குழு

வேலூர் மின் திட்டம்

டெண்டர் அறிக்கை

ஸ்பெசிபிகேஷன் எண் 5/67—68-ல் அடங்கியுள்ள கீழ்க்கண்ட டிரான்ஸ்போர்ட் வேலைகளுக்கும், எல்லா இடங்களிலும் ஏற்றுதல்—இறக்குதல் முதலிய வேலைகளுக்கும், முத்திரையிட்ட டெண்டர்களை, 'சூப்பரின்டெண்டிங் எஞ்சினீயர், வேலூர் மின் திட்டம், தமிழக மின்சார போர்டு, காட்பாடி நகர் விரிவு, வடாற்காடு மாவட்டம்' முகவரியில் உள்ள அவருடைய அலுவலகத்தில், 4—8—67-ந் தேதி பிற்பகல் 3-மணிவரை வரவேற்கப்படுகிறது.

எண்	வேலையின் மதிப்பு (சுமாராக)	வேலையைப் பற்றிய குறிப்புகள்
1.	ரூ. 70,000	தமிழக மின்சார அமைப்பைச் சேர்ந்த எல்லாப் பொருள்களையும், தமிழகத்தில் உள்ள எல்லா இடங்களின் இடையே சொந்த லாரிகளின்மூலம் கொண்டு செல்லுதல் (அந்தந்த இடங்களில் பொருள்களை ஏற்றுதல் — இறக்குதலும் உள்பட)
2.	ரூ. 50,000	(1) இரயில் நிலையங்களிலிருந்தும், அல்லது லாரி ஷெட்டுகளிலிருந்தும் காட்பாடி நகர் விரிவில் உள்ள மத்திய ஸ்டோர்சுக்கும், வேலூர் முள்ளிப்பாளையத்தில் உள்ள சப்-ஸ்டேஷன் யார்டுக்கும், பொருள்களை ஏற்றுதல்—இறக்குதல் உள்பட மற்ற வேலைகள்; (2) மேற்படி ஸ்டோர்சுகளிலிருந்து இரயில் நிலையங்களுக்குப் பொருள்களை மேற்கண்ட முறையில் கொண்டு செல்லுதல்; (3) வேலூரில் உள்ள ஸ்டோர் யார்டுகளில் பொருள்களை ஏற்றுதலும்—இறக்குதலும் போன்ற வேலைகளைச் செய்தல்.

டெண்டர் அனுப்பும் உறையின்மீது, 'ஸ்பெசிபிகேஷன் நெம்பர் 5/67—68, சேர வேண்டிய தேதி 4—8—67' என்று குறிப்பிட வேண்டும்.

டெண்டர் பாரத்தின் நகல்கள், ஸ்பெசிபிகேஷன் ஆகியவைகளை, விற்பனை வரி—இதர வரிகள் உட்பட ஒவ்வொரு டெண்டர் பாரத்துக்கும் ரூ. 5.13 வீதம் செலுத்தி, 24—7—67-ம் தேதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

டெண்டர் பாரத்தின் விலையை ரொக்கமாகவோ, அல்லது மணியார்டர் மூலமாகவோ, 'சீப்-அக்கௌண்டெண்ட், வேலூர் மின் திட்டம், காட்பாடி நகர் விரிவு, வட ஆற்காடு மாவட்டம்' அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு மணியார்டர் கூப்பனிலும் ஸ்பெசிபிகேஷன் நெம்பரை விவரமாகக் குறிப்பிட வேண்டும். டெண்டர் பாரமும், ஸ்பெசிபிகேஷனும் மாற்றம் செய்யப்பட மாட்டா. தகுந்த பாரங்களில் உரிய தேதிக்குமுன் அனுப்பப்படாத டெண்டர்களை கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

4—8—67-ந் தேதி பிற்பகல் 3-30 மணிக்கு ஆஜராக வேண்டும் என்ற விருப்பம் கொண்ட டெண்டர் அனுப்புவோரின் முன்னிலையில் டெண்டர்கள் திறக்கப்படும். அஞ்சல் துறையினால் ஏற்படும் காலதாமதங்களுக்கோ அல்லது இழப்புக்கோ இந்த மின்சாரக் குழு பொறுப்பல்ல.

மேற்பார்வை பொறியாளர்
வேலூர் மின் திட்டம்

தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு---

மாநகராட்சியும் கட்டுகிறது

சென்னை, ஜூலை 19—

சென்னையில் தொடர்ந்து ஏற்பட்ட தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் தருவதற்கு சென்னை மாநகராட்சியும் முனைந்துள்ளது.

முதல் படியாக சுமார் 1000 வீடுகளைக் கட்ட மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

மயிலாப்பூர் முண்டகக்கண்ணியம்மன் கோயில் பகுதியில் 250 வீடுகளைக் கட்டும் வேலை அடுத்த வாரம் துவங்கும். இங்கு மாநகராட்சிக்குச் சொந்த நிலம் இருப்பதாலேயே முதன் முதலில் இங்கு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டது.

இவ்வீடுகளுக்கு, தீ பிடிக்காத கல்நார் கூரைகள் வேயப்படும்.

"இவ்வீடுகளில் வசிப்பவர்களிடம் மாநகராட்சி, ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் வாடகை வசூலிக்கும்" என்று துணை மேயர் கிருட்டினமூர்த்தி கூறினார்.

ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு

தமிழக அரசின் பரிசுத் திட்டம்

சென்னை, ஜூலை 9—

தமிழக அரசு, வர்த்தகக் கழகங்களுடன் யோசனை கலந்து, ஏற்றுமதிக்குப் பரிசளிக்கும் ஏற்பாட்டைச் செய்துள்ளது; தமிழக ஏற்றுமதியாளர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

இந்தப் பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ள விரும்புகிற ஏற்றுமதியாளர்கள், இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள வினாத் தாளில் விவரங்களைத் தரவேண்டும்; இந்த வினாத் தாள், சென்னை ஷெரீப் அலுவலகத்தில் கிடைக்கும்.

வினாக்களையும், அவற்றுக்கான பதில்களையும் டைப் செய்தோ, 'சைக்ளோஸ்டைல்' செய்தோ அனுப்பலாம்.

முழுத் தகவல்களுடன்கூடிய வினா - விடை விண்ணப்பங்கள், 'சென்னை ஷெரீப் அலுவலகம், 330, தம்புசெட்டித் தெரு, சென்னை-1' என்ற முகவரிக்கு 1967 ஆகஸ்டு 31-ம் நாளுக்குள் வந்து சேரவேண்டும்.

சமுதாய நலத் திட்டத்தின் எதிர்காலம்

கட்சித் தலைவர்களுடன் தமிழக அரசு ஆலோசனை

சென்னை, ஜூலை 20—

சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் எதிர்காலம் குறித்துச் சட்டமன்றக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின் தமிழக அரசு முடிவு செய்யும்.

இன்று, முதலமைச்சர் அண்ணா உள்ளிட்ட எல்லா அமைச்சர்களும், தலைமைச் செயலகத்தில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடினர்.

தமிழக அரசின் தனி ஆய்வுரையாளரான திரு. எஸ். முருகேச முதலியாரின் அறிக்கைமீது விவாதம் நடைபெற்றது.

கிராமங்களை மேம்படுத்தும் வகையில் ஊராட்சிமன்றங்களை இயங்கச் செய்தல்—செலவிலும் ஊழியர் எண்ணிக்கையிலும் சிக்கனம்—உற்பத்திப் பெருக்கத்தை அடையக்கூடிய வகையில் ஆவன செய்தல்—கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து அந்த அறிக்கையில் கருத்தறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்கள், அறிக்கை மீதான தங்கள் முன்னோட்டக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தத்தம் கட்சி உறுப்பினர்களுடன் கலந்து பேசித் தங்கள் கருத்துக்களை எழுத்து வடிவில் ஆகஸ்டு 20-ம் நாளுக்குள் தந்துவிடுமாறு முதலமைச்சர் அண்ணா, கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

"அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பொறுத்தே அரசின் முடிவு பெரும்பாலும் அமையும்" என்று அண்ணா உணர்த்தினார்.

க. அன்பழகன்

டில்லி முகவரி :

K. ANBAZHAGAN M.A., M.P.,
9, ALENBY ROAD,
NEW DELHI-1.
Phone: 43174

‘எழுச்சி நாள்’---பொதுக்கூட்டங்கள்

[3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

மத்தூர்

மாலை 6-மணிக்கு; தலைவர் : கோ. கு. சுப்பிரமணியன் ; பேசுவோர் : புலவர் நடேசன், பரந்தாமன் பி.எஸ்சி., என். ஏ. ரசீத், இராமலிங்கம், பி. கோவிந்தசாமி, குமரேசன், ஞானப்பிரகாசம்.

புதுக்கோட்டை

இரவு 7-மணிக்கு திலகர் திடலில் ; தலைவர் : அ. தியாகராசன் ; பேசுவோர் : கோ. விசுவநாதம் எம்.ஏ.பி.எல்., எம்.பி., டி. பி. செகதீசன், கே. ஆர். சுப்பையா, பெரி. குமரவேல், வி. வி. எஸ். அக்கீம், பி. வி. எம். சுந்தரம்.

குடியேற்றம்

மாலை 6-மணிக்கு ; தலைவர் : ஏ. இராமகிருட்டினன் ; பேசுவோர் : எல். எம். எஸ். தட்சிணாமூர்த்தி, எ.க. துரைசாமி, வி. கே. கோதண்டராமன் எம்.எல்.ஏ., டாக்டர் ஜி. கண்ணபிரான், அக்பர் பாட்சா, வி. எம். எத்துராசு, ஏ. ஏ. கோவிந்தராசு, வ. நடராசன்.

திருவொற்றியூர்

மாலை 6-மணிக்கு சன்னதி வீதியில் ; தலைவர் : வை. பார்த்தசாரதி ; பேசுவோர் : க. அறிவழகன் எம்.ஏ., டாக்டர் என். ரங்கநாதன், வ. ஆ. ஞானசாமி, என். வி. கன்னியப்பன், அமரஅண்ணல், எம். ஏ. ஆர். சரீப் பி.ஏ.பி.எல்., மா. வெ. நாராயணசாமி.

மண்டலமாணிக்கம்

இரவு 7-மணிக்கு ; ஊராட்சி மன்றம் எதிரில் ; தலைவர் : பெ. அமிர்தலிங்கம் ; பேசுவோர் : மு. வீரத்தியாகி, பெ. பொன்னுசாமி ; எம். ஏ. இராமன், மே. முத்து, ஆர். முத்துசாமி, மு. தங்கவேலன், இ. உக்கிரபாண்டியன், மு. இராமசாமி, க. மதிமருது, சி. டி. பாலு.

குரோம்பேட்டை

மாலை 6-30 மணிக்கு ; தலைவர் : மா. மதுரை ; பேசுவோர் : கே. வி. கேரளீயன், ஆர். ஆர். பதி, தம்பி ஆதி, வி. இராமச்சந்திரன், பார்த்தசாரதி, ஏ. இராமலிங்கம், கல்லாடி கிருட்டினன், தே. மணியம்.

கோயம்பேடு

தி. மு. க. சார்பில் மாலை 2-மணிக்கு ; தலைவர் : ஓ. எஸ். பாலசுந்தரம் ; பேசுவோர் : ஜி. ஆசாமி, சானகிராமன், எம். கோபால் எம்.எல்.ஏ.

கழிஞ்சூர்

மாலை 6-மணிக்கு ; தலைவர் : க. பெ. ஆறுமுகம் ; பேசுவோர் : ஏ. வி. துரைசாமி, மு. கோதண்டன், த. கு. சந்திரசேகரன், வி. சோழன், கு. சுப்பிரமணி, மற்றும் பலர்.

பனப்பாக்கம்

மாலை 6-மணிக்கு ; சுங்கச்சாவடி மண்டபத்தில் ; தலைவர் : பி. பஞ்சாட்சரம் ; பேசுவோர் : நடிகர் சௌந்தரராசன் பி.காம்., சி. வி. ஆடலழகன், க. வ. கேரளீயன் மற்றும் பலர்.

மடுவின்கரை

இரவு 7-மணிக்கு ; தலைவர் : இ. விசயனுர் ; பேசுவோர் : மு. கோபால் எம்.எல்.ஏ., ஆலந்தூர் எஸ். பாலன், வி. பி. அகிலன், வி. து. லோகநாதன், சோ. கி. மூர்த்தி, ஆ. சின்னசாமி, ஆர். கோபால்.

குருவரெட்டியூர்

இரவு 8 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : சி. குருமூர்த்தி ; பேசுவோர் : ஈ.எம். நடராசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., சிவ. நடராசன், மா. பெ. அம்மையப்பன்.

வேதாரண்யம்

மாலை 6 மணிக்கு இராசாசி பூங்காவில் ; தலைவர் : சி. இராசம் ; பேசுவோர் : சிவ. கனகசுந்தரம், வி. இராசாராமன், கு. வேதையன், எஸ். கோபால்.

திருத்துறைப்பூண்டி

மாலை 6-மணிக்கு தெற்கு வீதியில் ; தலைவர் : த. சோமசுந்தரம் ; பேசுவோர் : இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., எஸ். சண்முகசுந்தரம், வை. சுப்பிரமணியம், கா. இராமச்சந்திரன், ஆர். ஸ்ரீவத்சன், எம். நாராயணன், எம்.பி. கண்ணுசாமி, என். கோதண்டராமன்.

கூத்தாநல்லூர்

மாலை 6-மணிக்கு ; பேசுவோர் : சு. தென்கோவன், ஏ. கே. சுப்பையா, மற்றும் பலர்.

வந்தவாசி

இரவு 7 மணிக்கு ; தலைவர் : எம். கே. இப்ராகிம் ; பேசுவோர் : எஸ். முத்துலிங்கம் எம்.எல்.ஏ., வி. டி. அண்ணாமலை எம்.எல்.ஏ., எஸ். கே. ரெசாக், ஆர். வேணுகோபால், கே. எம். அசன் பி.காம்.,பி.எல்., டி. கே. துரை, கா. சி. பெருமாள், கே. ஏ. வகாப், வி. கே. வேணுகோபால், டாக்டர் சந்தானம்.

வடபாதிமங்கலம்

மாலை 7-மணிக்கு ; தலைவர் : சுல்தான் ; பேசுவோர் : சு. தென்கோவன், முருகையன், மற்றும் பலர்.

சித்தமல்லி

மாலை 6-மணிக்கு பிள்ளையார் கோவிலடியில் ; தலைவர் : வீ. பெத்தப்பெருமாள் ; பேசுவோர் : அ. த. சோமசுந்தரம், கே. வடிவேல், எஸ். சங்கரன், அ. முகைதீன் பிச்சை, வை. பொன்னுசாமி, மா. பொதியப்பன்.

சாத்தூர்

இரவு 7 மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : எஸ். இராமசாமி எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.; பேசுவோர் : பா. நடராசன், ஏ. சுலைமான், ஜி. செல்லப்பா, வி. இரங்கசாமி, எஸ். அப்பணசாமி, இரா. கருப்பசாமி, கோ. சொக்கலிங்கம், செல்லச்சாமி, அய்யாச்சாமி, குருசாமி மற்றும் பலர்.

லால்பேட்டை

மாலை 6 மணிக்கு கடைத் தெருவில்; தலைவர் : ஜே. எம். சக்கரியா; பேசுவோர்: அ. நடராசன் வ. மாயவன் எம்.பி., பொன். சொக்கலிங்கம், எம். ஆர். கிருட்டினமூர்த்தி, எச். முகமது, டி. எம். அப்துல்கலீல், இரா. க. சீனிவாசன், இரா. செல்வராசன், இரா. கணேசன், கோ. துரைராசன், சிவ. சொக்கலிங்கம், எம். ஈ. சக்கரியா, ஏ. சபீகுர் ரகுமான்.

பாண்டமங்கலம்

இரவு 7 மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : வீ. வணங்காமுடி ; பேசுவோர் : சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., ப. முத்தரசு, ஆ. மணிமாறன், ஏ. வாசுதேவன், ஏ. இராசு, மற்றும் பலர்.

பொத்தனூர்

மாலை 6-மணிக்கு ; தலைவர் : பி. ஏ. சுப்பிரமணியம்; பேசுவோர்: சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., ஆ. மணிமாறன், மலை. செகநாதன், ஒய். முருகேசன, எம். பனையடியான்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நான் செலுத்துகின்ற அந்த அளவு கவனம்கூட, இன்றையத் தினம் செலுத்தவில்லை ; செலுத்தாததற்கு முக்கிய காரணம், என்னுடைய உள்ளத்தில் மோதிக்கொண்டிருந்த ஓர் எழுச்சிதான் !

அமைச்சர்கள்

சுற்றுப்பயணம்

அறிஞர் அண்ணா

சூலை 23 காலை 10-30 மணி : வெட்டன் விடுதி உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழா (ஆங்குடித் தொகுதி); மாலை 5-30 மணி: நாட்டரசன்கோட்டைபெண்கள் உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழா; இரவு 7 மணி: சிவகங்கை—எழுச்சிநாள் பொதுக்கூட்டம்.

சூலை 24 காலை 10 மணி : குடுமியாமலை (புதுக்கோட்டை); மாலை 4-30 மணி : பொதலூர் பண்ணை (திருச்சி).

இரா. நெடுஞ்செழியன்

சூலை 23 மாலை 3-மணி: இடைப்பாடி—எழுச்சி நாள் நிகழ்ச்சி; 6-மணி : இராசிபுரம் — எழுச்சி நாள் நிகழ்ச்சி; இரவு 8-மணி : சேலம்—எழுச்சி நாள் நிகழ்ச்சி.

ஏ. கோவிந்தசாமி

சூலை 23 காலை 9 மணி : கோவை மார்க்கெட் கமிட்டி அலுவலகத் திறப்பு ; 10-30 மணி : மூங்கில் தொழிலாளர் சங்கத் துவக்க விழா : மாலை 7 மணி : பொதுக் கூட்டம்.

சூலை 24 காலை 9 மணி : அன்னூர் விவசாயிகள் சந்திப்பு ; பிற்பகல் 2 மணி : ஆனைமலை ஊராட்சி ஒன்றிப்பு அலுவலகத் திறப்பு; 3 மணி : பொள்ளாச்சி வேளாண்மைப் பொருள் கிடங்குத் திறப்பு ; மாலை 4 மணி : நகராட்சி வரவேற்பு ; 6 மணி : வேடப்பட்டி.

செ. மாதவன்

சூலை 23 மாலை 4 மணி : தூத்துக்குடி—எழுச்சி நாள்.

சூலை 24 காலை 9 மணி : சிவனுடானூர் பீடித் தொழிலாளர் வரவேற்பு ; 9-30 மணி கல்லூரணி; 10 மணி : குறும்பலாப்பேரி; 10-30 மணி : கீழப்பாவூர் ; 11 மணி : ஆவுடையானூர் ; 3 மணி : தென்காசி, குற்ருலம் அரிமா சங்க வரவேற்பு; 4 மணி : பூலாங்குளம் ; 4-30 மணி : கழநீர்குளம்; 5-30 மணி: ஆலடிப்பட்டி ; 6-30 மணி : ஆலங்குளம் ; இரவு 8 மணி : முக்கூடல்.

சூலை 25 பிற்பகல் 3 மணி : அருப்புக்கோட்டை பட்டுநூல் சங்கம் ; 3-30 மணி : வணிகர் சங்கம் ; மாலை 4 மணி : எஸ்.பி.கே. உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் சங்கம் ; 4-30 மணி : ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு; 5-30 மணி : நெசவாளர் கூட்டுறவு குடியிருப்பு ; 6 மணி : திருநகர் பகுதி வரவேற்பு ; இரவு 7 மணி : எம். எஸ். ஆர். படிப்பகச் சார்பில் கவிஞர் எஸ். எஸ். இராமசாமி அவர்களின் 54-வது வெள்ளணி நாள் விழாப் பொதுக்கூட்டம்.

‘எழுச்சி நாள்’ தீர்மானம்

சூலை 23—‘எழுச்சி நாள்’ அன்று நடைபெறும் பொதுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் :—

“சர்வதேச அரங்கில் நாட்டின் தன்மதிப்பு உயரவும், நாட்டின் இயற்கைச் செல்வங்களை வகைப்படுத்தி -- முறைப்படுத்தி வளமை காணவும், திட்டங்களின் அடிப்படையில் நாட்டைச் செழுமையுள்ளதாக்கவும் படிப்படியான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது இன்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப, மத்திய அரசு திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளதாகச் சொல்லப்படும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தமிழ்நாட்டு மக்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் உறுதுணையும் மத்திய அரசுக்கு அளித்து, நாட்டின் பொதுப்படையான வளர்ச்சிக்காகப் பலவித தியாகங்களும் செய்துவருகின்றனர்.

“இப்படிச் செய்துவரும் தியாகங்களுக்கும், திட்ட முதலீடுகளின் வகைக்குச் சேர்த்துக் கொடுக்கும் செல்வங்களுக்கும் உரிய பங்கு — மரியாதை, மத்திய அரசிடமிருந்து கிடைக்கின்றனவா என்பதைத் தமிழக மக்கள் நினைத்துப் பார்க்குந்தோறும், வேதனையடையும் வகையிலேயே மத்திய அரசின் அலட்சியப் போக்கு இருந்துவருவதைத் தமிழகத்தின் சர்வ கட்சியினரும் அடங்கிய இந்தக் கூட்டம் வருத்தத்துடன் மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

“பொதுவாக மத்திய அரசிடமிருந்தும், குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நியாயமான பங்கீடும், உரிய திடடங்களும் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்ற குறைபாடு தமிழக மக்கள் அனைவர் உள்ளங்களிலும் நிலவி வருவதைப் பெருமளவு வெடித்துக் கிளம்பும் கிளர்ச்சியாக உருவெடுக்கவொட்டாமல், தமிழகத்திற்கே உரிய அமைதியான பண்புகளும் அரசியல் நாகரிகமும் சனநாயகத்தின் முழுப் பொருளை உணர்ந்த மக்கள் தலைவர்களின் செல்வாக்கும் இங்கு தடுத்து நிறுத்தி வருகின்றன.

“இயற்கையாகவே செழிப்பும் வளமையும், உழைப்பாற்றலும், தன்மதிப்பு உணர்வும் மிக்க தமிழ்நாடு, இதுவரை வெறும் பேராசை காரணமாகவே ஆடம்பரமான திட்டங்கள் எவற்றிற்கும் மத்திய அரசிடம் கெடுபிடி செய்தோ, கிளர்ச்சியில் ஈடுபட்டோ நடந்து கொண்டதில்லை. மேலும், ‘பெருமளவு முதலீடுகளை முழு வேகத்தில் செலவிட்ட பிறகே இங்கு வளமை உண்டாக்க முடியும்’ என்கிற அளவுக்குத் தமிழகம் காடோ கரம்போ, பாலையோ சதுப்போ அல்ல ! ஓடித் தேடி ஊரூராய் பார்த்து, ‘திட்டங்களுக்காகவே திட்டங்களை இங்கு நிறைவேற்ற வேண்டும்’ என்று என்றைக்கும் தமிழ்நாடு வாதாடியதில்லை ! ‘இயற்கைச் செல்வமும் இயல்பான வசதிகளும் திட்டங்களில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்’ என்று ஆகும்போது, இதுவரை அந்தப்படியாகத் தமிழ்நாடு மத்திய அரசால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைப் பலமுறை வேதனையோடு தமிழகத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

“மூன்று ஐந்தாண்டுகளுக்காக மத்திய அரசு வாங்கிய வெளிக் கடன்களுக்காகவும், செலவிட்ட பொருளை ஈடு செய்வதற்காகவும், நாட்டின் மற்ற பகுதிகளைப்போலவே தமிழ்நாடும் பிணைப்புற்றிருக்கிறது ; ஆனால், தமிழர்களின் நெடுநாள் ஆவலும் கோரிக்கையுமான சேலம் உருக்காலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் ஆகிய இரு திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமெனத் தமிழக மக்களும், அவர்கள் தலைவர்களும் தொடர்ந்து வற்புறுத்திக் கேட்டு வந்தும் மத்திய அரசு அலட்சியப் போக்கிலும், பொறுப்பற்ற முறையிலும் நடந்து வருவதை சர்வ கட்சியினரும் அடங்கியஇந்த எழுச்சி நாள் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

“சேலம் இரும்புக் கனிகளைப் பயன்படுத்தும் முயற்சி ஏறக்குறைய 150 ஆண்டுகளாக இங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல், தூத்துக்குடித் துறைமுகத் திட்ட முயற்சியும் ஏறக்குறைய கடந்த நூருண்டுக் காலமாகப் பல்வேறு வகையில்—பல்வேறு துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் நினைவிலும் முயற்சியிலும் நீங்காத இடம் பெற்றுத் திகழும் இந்தத் திட்டங்களை, நியாயமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே முழுமையாக உள்ளடக்கி மத்திய அரசு நிறைவேற்றியிருக்க வேண்டும் ; மாருக, வேளைக்கொரு சமாதானமும் ஆளுக்கொரு காரணமுமாகச் சொல்லி, இத்தனை நாளும் இந்தத் திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்ற மனமில்லாதிருப்பதை உணர்ந்து இந்தக் கூட்டம் பெரிதும் வருந்துகிறது.

“எல்லையில் நிலவும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பையும், பகுதிக்குப் பகுதி உள்நாட்டில் நிலவும் ஏற்றத்தாழ்வையும், தர்க்க அறிவாலோ,புத்தகப் புள்ளிவிவரங்களாலோ போக்கிவிட முடியாது என்பதை மத்திய அரசு உணரவேண்டும். நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கேற்பவும், நாட்டின் ஒருமைக்கு வலிவு சேர்க்கும் வகையிலும் அந்தந்தப் பகுதி மக்களின் உள்ளத்தில் நிறைவு கூட்ட வேண்டியது மத்திய அரசின் கட்டாயக் கடமையாகும்.

“தூத்துக்குடி, சேலம் திட்டங்கள் ஏன் தேவை—எதற்குத் தேவை என்பனவெல்லாம் ஆண்டுக்கணக்காகத் தமிழ்நாட்டுத் தலைவர்களால் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்தக் கூட்டம் மீண்டும் நினைவூட்டுகிறது.

“சேலம் இரும்புருக்காலையும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகமும் தமிழர்களின் இன்றியமையாத் தேவை என்பதை, சர்வ கட்சியினரும் அடங்கிய இந்தக் கூட்டம் மத்திய அரசுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெரிவிப்பதுடன், இந்தத் திட்டங்களை எத்தகைய சாக்குப்போக்கும் சொல்லாமல் ஏற்றுக்கொண்டு, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுவதற்கு உடனடிச் செயல்களில் முனைந்து ஈடுபட வேண்டுமென்று இந்தக் கூட்டம் மத்திய அரசை மிக அழுத்தமாக வற்புறுத்துகிறது.”

---தி. மு. க.

நடக்க இருப்பவை
24--7--67

நாகை

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அவுரித் திடலில் ; தலைவர் : எஸ். தியாகராசன் பி.ஏ., பி.எல்., பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன் பி.ஏ., ப. நாராயணசாமி, ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ.

திருவில்லிபுத்தூர்

எம். ஜி. ஆர். சானகி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு மடத்துப்பட்டித் தெருவில் ; தலைவர் : மா.குருசாமி எம்.சி., பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஆர். கே. துரை. நாரணன், சி. விநாயகமூர்த்தி.

கோவை 12-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு ; பேசுவோர் : செ. மாதா கவுடர், ப. கோபால், கேரள சுந்தரம், க. மருதாசலம், மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு வழுதி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.